முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 985

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

10.06.2022, வெள்ளிக்கிழமை

1. ஞானயுகம் படைக்க வந்த ஞானியே
ஞானிகளை உருவாக்க வந்த நல்தவசியே
வானவர்கள் போற்றுகின்ற தர்மத்தை
வாரி வழங்கி உலகத்தை தர்மலோகமாக்க
2. ஆக்கவே உயர் அவதாரம் புரிந்த அரங்கனே
அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும் அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் வைகாசி மாதம் 27 ம் நாள், 10.06.2022 வெள்ளிக்கிழமை)
வரங்களாக உந்தனுக்கு நித்தம்நித்தம்
வடிவேலன் சக்தி ஊட்டி வர
3. வருகின்ற உன் அவதாரத்தின் மூலமே
வையகம் மாற்றம் காணக்கூடும்
தருகின்ற உன் தீட்சை பலம் மூலமே
தரணியோர் சக்தி கூடி ஞானிகளாகக்கூடும்
4. ஆகவே அரங்கன் வாழ் பிரணவக்குடில்
ஆறுமுகன் என் சூட்சும படை வீடாகும்
வரமென உலகோர் வணங்கி வந்தால்
வையகத்தில் மாற்றத்தை சடுதி காணக்கூடும்
5. கூடவே அரங்கனுக்காய் யான் வகுத்துள்ள
குறையில்லாத சன்மார்க்க நெறிகளை
நெறிகளை மெய்ஞான வழியாக
நிலவுலகோர் ஏற்று பின்பற்றினால்
6. ஐயமிலா அவரவர் வாழ்விலும்
ஆனந்தம் அழியாமை என்கின்ற மகா சக்தியும்
சக்தியும் வரமாகக் கிட்டி உலகோர்
சடுதி ஞானிகளாகக் கூடும்
7. பக்திபட அரங்கன் வழி வர
பாருலகம் ஞான லோகமாகும்
ஆகுமே அரங்கன் தயவால்
அகிலம் அற்புதத்தைக் காணும்

அரங்கனுக்கு மொழிந்த ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–